**CC.NO. 67/2019** தேதி**: 02.06.2026**

**<u>அசா 31 திரு. தாமோதரன் த/பெ கோதண்டராமன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 6 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. வழக்கு தொடர்பான ஆவணங்கள் கூட்டுறவு சங்க சட்டம் 81 ன் படி விசாரணை செய்த அலுவலரிடமிருந்து கைப்பற்றபட்டது என்றால் சரிதான். என்னுடைய கடிதத்தின் பேரில் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் சங்க அதிகாரி என்னிடம் ஒப்படைத்தார். ஆவணங்களின் அடிப்படையில் என்னால் வழக்கு சாட்சிகளிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். சாட்சிகளை நான் அழைப்பாணை சார்வு செய்து தான் விசாரணை செய்தேன். வழக்கு தொடரபான ஆவணங்கள் நான் பெற்ற பின்னரே சாட்சிகளிடம் விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரிடமும் என் விசாரணையின்போது ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளேன். வழக்கு தடயபொருள்கள் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் என்னால் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய விசாரணையின் போது சுவாமியப்பா கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தால் அஞ்சல் வழி கல்வியும் நடத்தப்பட்டது என்பது தெரியவந்தது. என் விசாரணையின்போது சுவாமியப்பா பயிற்சி கல்லூரியில் மாணவர்கள் சேர்ந்ததற்கான ஆவணங்ளையும், தொகை செலுத்தியதற்கான பதிவேடுகளையும் நான் கைபற்றினேனா என்றால் என் விசாரணைக்கு தேவையில்லை என்பதால் நான் கைபற்றபடவில்லை. சுவாமியப்பபா கூட்டுறவு பயிற்சி கல்லூரியின் அஞ்சல் வழி மாணவர்சேர்க்கை தொடர்பான விவரக்கையேடு என்னால் கைப்பற்றபட்டதா என்றால் கைப்பற்றபட்டது.

2. போலியான ஆவணங்கள் தயார் செய்த நபர்களின் தொடர்பான கண்ணுற்ற சாட்சிகளை என்னுடைய விசாரணையில் நான் விசாரித்துள்ளேன். போலி ஆவணங்களை தயார் செய்ய பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ரப்பர் ஸ்டாம்ப்கள் யாரால் எங்கு தயாரிக்கப்பட்டது என்று தெரியவில்லை. மாதிரி கையொப்பம் பெற நீதிமன்றத்தின் மூலமாக மனு செய்து மாதிரி கையொப்பம் பெறப்பட்டதா என்றால் இல்லை. நேரடியாக என்னால் பெறப்பட்டு நீதிமன்றம் மூலமாக அனுப்பட்டது. நான் சொல்வதுபோல் எதிரிகளிடம் என்னால் நேரடியாக மாதிரி கையொப்பம் பெறப்பட்டது என்று சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. எதிரிக்களுக்கும் இந்த ஆவணங்களும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த முகாந்திரமும் எதிரிகள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(3 மற்றும் 13 வது தரப்பு வழக்கறிஞர்கள் 6 வது தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறினார்கள். )**

**(4,7,9,10,17,18,31 எதிரிகள் தரப்பபில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாததால் சாட்சியின் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.